செய்தி வெளியீடு எண்: 132 நாள்: 04.10.2022

**<u>மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.என்.ரவி அவர்கள் சுதந்திரப் போராட்ட தியாகிகள் சுப்ரமணிய சிவா மற்றும் திருப்பூர் குமரன் ஆகியோரின் பிறந்தநாள் நினைவாக இன்று (04.10.2022) சென்னை,ஆளுநர் மாளிகையில் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.</u>**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.என்.ரவி அவர்கள் சுதந்திரப் போராட்ட தியாகிகள் சுப்ரமணிய சிவா மற்றும் திருப்பூர் குமரன் ஆகியோரின் பிறந்தநாள் நினைவாக இன்று (04.10.2022) சென்னை, ஆளுநர் மாளிகையில் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சுப்பிரமணிய சிவா மற்றும் திருப்பூர் குமரன் ஆகியோரின் தேசப்பற்று மற்றும் மகத்தான தியாகங்களை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பறைசாற்றினார்.

சுப்ரமணிய சிவா தனது வாழ்நாள் முழுவதையும் தேசத்திற்காக அர்ப்பணித்தவர். காவலர்களின் தடி அடி, துப்பாக்கி சூடு இதற்கு அஞ்சாமல் இறுதி மூச்சு வரை "வந்தே மாதரம்" முழங்கி மூவர்ணக் கொடியை தன் இறுதி மூச்சு வரை கையோடு வைத்திருந்த இளம் சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன்.

ஆங்கிலேயர்களால் கொடூரமாக தாக்கப்பட்டார் இருப்பினும் அன்னை தாய்த்திருநாட்டின் தவப்புதல்வர்களாக திகழ்ந்தவர்கள். அவர்களின் ஈடு இணையற்ற பங்களிப்புகளுக்கு நம் இந்திய தேசம் எப்போதும் நன்றியுடன் இருக்கும். அவர்களின் வாழ்க்கை வரும் தலைமுறைகளுக்கு உத்வேகமாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், திரு. ஆனந்த்ராவ் வி பாட்டில் , இ.ஆ.ப., ஆளுநரின் முதன்மைச் செயலாளர், ஆளுநர் மாளிகை அலுவலர்கள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்

---

ஆளுநர் மாளிகை, சென்னை-22. வெளியீடு:

04.10.2022 இணை இயக்குநர் (ம.தொ)